**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
**&**
**இந்திய வானிலைத் துறை**
**வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், கோவை**
**திருப்பூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**
**(27.04.2024 முதல் 01.05.2024)**

**அறிக்கை எண் 034/2024** **தேதி.26.04.2024**

### மாநிலத்தின் கடந்தவார வானிலை

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 35°செ முதல் 41°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 23°செ முதல் 29°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேரவெப்பநிலை 21°செ முதல் 28°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 12°செ முதல் 14°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஆங்காங்கே பரவலாக மழை பெறப்பட்டது.

### திருப்பூர் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

திருப்பூர் மாவட்டத்தின் 23.04.24 முதல் 25.04.24 வரையிலும் பகல்நேரவெப்பநிலை 36°செ முதல் 39°C முதல் 40°C ஆகவும் இரவுநேரவெப்பநிலை 25°C முதல் 27°C ஆகவும் காலைநேர காற்றின் ஈரப்பதம் 75 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 20 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 08-11 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்குதிசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை பதிவானது.

### திருப்பூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

| கடந்த வார வானிலை (23.04.2024 முதல் 25.04.2024) | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 01.05.2024- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 23/04 | 24/04 | 25/04 | தேதி | நாள்-1 27/04 | நாள்-2 28/04 | நாள்-3 29/04 | நாள்-4 30/04 | நாள்-5 01/05 |
| 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 0 |
| 40 | 39 | 39 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 43 | 42 | 42 | 43 | 43 |
| 27 | 25 | 26 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 27 | 27 | 28 | 28 | 28 |
| 6 | 6 | 3 | மேக மூட்டம் (ஆக்டா) | 3 | 4 | 5 | 5 | 6 |
| 69 | 62 | 75 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 60 | 50 | 50 | 60 | 60 |
| 22 | 21 | 20 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 20 | 20 | 20 | 20 | 20 |
| 11 | 8 | 9 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 10 | 10 | 10 | 14 | 14 |
| 90 | 90 | 90 | காற்று வீசும் திசை | 160 | 200 | 200 | 230 | 250 |

### எதிர்பார்க்கப்படும் வானிலை திருப்பூர் (27.04.2024 முதல் 01.05.2024)

வரும் நாட்களில் வானம் தெளிவாக காணப்படும். அடுத்த ஐந்து நாட்களுக்கு வறண்ட வானிலை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்சவெப்பநிலை 42°செ முதல் 43°செ ஆகவும், குறைந்தபட்சவெப்பநிலை 27°செ முதல் 28°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 60 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின்

ஈரப்பதம் 20 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்று மணிக்கு 10-14 கி.மீ வேகத்தில் வீசக்கூடும். காற்று பெரும்பாலும் தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**திருப்பூர் மாவட்டத்தில் உள்ள தொகுதி வாரியாக உள்ளஅடுத்த ஐந்து நாட்களுக்கான மழையளவு**

| தேதி | அவினாசி | தாராபுரம் | குடிமங்கலம் | காங்கேயம் | குண்டடம் | மடத்துக்குளம் | மூலனூர் | பல்லடம் | பெங்கலூர் | திருப்பூர் | உடுமலைப்பேட் | ஊத்துக்குளி | வெள்ளக்கோவில் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **27-04-2024** | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| **28-04-2024** | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| **29-04-2024** | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| **30-04-2024** | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| **01-05-2024** | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |

**வேளாண் அறிவுரைகள்**

| | | |
|---|---|---|
| பொது அறிவுரை | | அடுத்து வரும் நாட்களில் மேற்கு மண்டல பகுதிகளில் 8 - 12 கி.மீ வேகமான காற்றுடன் வறண்ட வானிலை எதிர்பார்க்கப்படுகிறது. மதியநேரங்களில் (12.00 – 3.00 மணிவரை) அதிக வெப்பநிலை எதிர்பார்க்கப்படுவதால் அச்சமயத்தில் வேலைபார்பதோ அல்லது வெளியில் செல்வதையோ விவசாயிகள் தவிர்க்கவேண்டும். மண் ஈரத்தினை பொறுத்து இறவைப் பயிர்களுக்கு நீர்ப்பாசனம் செய்து பயிர் கழிவு மூடாக்கு இடவும். மழையினைப்பயன்படுத்தி சரிவுக்கு குறுக்காக மண் புரட்டிபோடும் கலப்பை கொண்டு கோடை உழவினை மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகின்றனர். |
| கரும்பு | வளர்பருவம் | சில பகுதிகளில் தொடர்ந்து வறண்ட வானிலை காணப்படுவதால் கரும்பின் நுனிக்குருத்துப்புழு வர வாய்ப்புள்ளது. ஏனவே விவசாயிகள் அடிக்கடி நீர் பாய்ச்சி வயலை ஈரமாக வைத்துக்கொள்வதுடன் பயிர் மூடாக்கும் செய்யலாம். |
| தென்னை | | கோடை காலத்தில் பெறப்படும் மழையினை வேர் பகுதியல் சேமிக்கும் வகையில் மரத்தினை சுற்றிலும் பாத்திகளை உள்நோக்கி சாய்வாக ஆழப்படுத்தவும், |

| | | |
|---|---|---|
| கால்நடைகள் | | உயர்ந்துவரும் வெப்பநிலை மற்றும் குறைந்து வரும் காற்றின் ஈரப்பதம் காரணமாக கால்நடைகளுக்கு வெப்பஅழுற்சி ஏற்பட வாய்ப்புள்ளதால் கால்நடை மற்றும் கோழிகளுக்கு போதுமான அளவு சுத்தமான குடிநீர் அளிக்கவும்.<br>தொடர்ந்து வறண்ட வானிலையுடன் அதிக வெப்பமும் காணப்படுவதால் கோழி மற்றும் மாடு கொட்டகைகளின் மேல் தண்ணீர் தெளிப்பதன் மூலம் வெப்பத்தின் தாக்குதலை குறைக்கலாம் அல்லது நனைந்த கோணிப்பையை கூடாரத்தின் ஒரங்களில் தொங்கவிடுவதும் ஓரளவிற்கு நன்மை பயக்கும்.<br>மதியநேரங்களில் (12.00 – 3.00 மணிவரை) அதிக வெப்பநிலை எதிர்பார்க்கப்படுவதால் அச்சமயத்தினைத் தவிர்த்து கால்நடைகளை 4.00 மணிக்கு மேல் மேய்ச்சலுக்கு விடவும். |

### குறுஞ்செய்தி

- தொடர்ந்து வறண்ட வானிலையுடன் அதிக வெப்பமும் காணப்படுவதால் கோழி மற்றும் மாடு கொட்டகைகளின் மேல் தண்ணீர் தெளிப்பதன் மூலம் வெப்பத்தின் தாக்குதலை குறைக்கலாம்

**முதன்மைஅலுவலர் (GKMS)**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை**